# 6 வாழ்வியல் சடங்குகள்

மனிதன் தனது வாழ்க்கையை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழவேண்டும். அதற்காக எமது முன்னோர், மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகளை ஒழுங்குபடுத்தியுள்ளனர். சடங்குகள் என்பவை, மனிதன் உலக வாழ்க்கைக்கான தேவைகளை அர்த்தத்துடன் அடைய முயற்சிக்கும் வழி முறையாகும்.

சைவ சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பல சடங்குகள் எமது வாழ்வியலோடு தொடர்புடையவை. அவ்வாறு மக்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகளை வாழ்வியல் சடங்குகள் என்பர். பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடு தொடக்கல் முதலானவை வாழ்வியல் சடங்குகளுட் சிலவாகும். நாம் அவை பற்றி அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

## அ. பெயர் சூட்டுதல்

பெயர் சூட்டும் சடங்கு **நாமகரணம்** எனவும் வழங்கப்படும். குழந்தை பிறந்ததிலிருந்து ஒரு மாத காலத்தினுள் பெயர் சூட்டுதல் வேண்டும். முன்பு தெய்வங்களின் பெயர்களைச் சூட்டும் வழக்கமே பெரும்பாலும் இருந்தது. ஆனால் தற்போது அந்த வழக்கம் அருகி வருகின்றது. எனவே, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அது எமது பண்பாடு வளர வழிவகுக்கின்றது.

குழந்தை பிறந்த நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, முதல் எழுத்தைத் தெரிவு செய்து பெயரிடும் வழக்கம் சைவ சமயத்தவர்களிடையே உண்டு. பெயரிடுதல் தொடர்பான விளக்கத்தைப் பஞ்சாங்கத்தில் காணலாம். குழந்தைகளுக்குப் பெயர்களைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோர் மிகுந்த கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். நமது கலாசாரத்தை வலியுறுத்துகின்ற பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டுதல் நல்லது.


பெயர் சூட்டல் சடங்கானது, ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் முன்னிலையில் இடம் பெறும். முதலில் இறைவனுக்கு வழிபாடு நடத்தப்படும். அதனை அடுத்து, தெரிந்தெடுத்த பெயரை, குழந்தையின் தந்தை அல்லது மாமன் குழந்தையின் காதில் மூன்று முறை சொல்ல வேண்டும். சூழ்ந்திருக்கும் பெரியோர்களும் அதனை ஏற்றுச் சொல்ல வேண்டும்.

எமது சமயத்தில் குழந்தைக்குப் பெயர் சூட்டி ஆசீர்வதித்தல் ஒரு சடங்காகும். நாமும் அவற்றிற்கு மதிப்பளித்து ஒழுகுதல் வேண்டும்.

## ஆ. சோறூட்டுதல்

குழந்தை பிறந்த ஆறாவது மாதத்திலும் சோறூட்டும் சடங்கு நடைபெறும். அச் சடங்கு **அன்னப்பிராசனம்** எனவும் வழங்கப்படும். குழந்தை பிறந்ததில் இருந்து திரவ ஆகாரத்தையே பருகிவரும் அத்தகைய குழந்தைக்கு சோறு (அன்னம்), தயிர், நெய், தேன் என்பவற்றைக் கலந்து, நல்லெண்ணத்துடன் முதன் முதலாக ஊட்டி விடுதல் **சோறூட்டல்** எனப்படும். இதற்குரிய பொருத்தமான நாளினைப் பஞ்சாங்கத்தில் பார்த்துத் தெரிவு செய்தல் வேண்டும்.

சோறூட்டல் சடங்கு ஆலயம், வீடு முதலான இடங்களில் நடைபெறும். அச் சடங்கு நடைபெறும்போது தாயார் குழந்தையை மடியில் வைத்துக்கொள்ள வேண்டும். தந்தையார் அருகில் இருக்க வேண்டும். சோறூட்டல் சடங்கு விநாயகர் பூசையுடன் ஆரம்பிக்கப்படும். ஒரு கிண்ணத்தில் சோறு, தயிர், நெய், தேன் என்பவற்றைப் பிசைந்து, பூசையில் வைக்கப்படும். பூசை நிறைவடைந்ததும், பூசையில் வைத்த பிரசாதத்தை தந்தை அல்லது மாமன் குழந்தைக்கு, சிவசிந்தனையுடனும் நல்லெண்ணத்துடனும் மூன்று முறை ஊட்டி விடுதல் வேண்டும். தொடர்ந்து மற்றவர்களும் ஊட்டிவிடுவர்.




குழந்தை உடல் வலிமையோடு இருக்கவும் வாழ்நாளில் உணவுக்கு எந்தக் குறையுமின்றி உண்டு வாழவும் இறையருளை வேண்டிப் பிரார்த்தித்தல் சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கமாகும்.

## இ. ஏடு தொடக்கல்

ஏடு தொடக்கல் நிகழ்வு 'வித்தியாரம்பம்', அட்சர அப்பியாச ஆரம்பம்' என்ற பெயர்களாலும் அழைக்கப்படும். குழந்தைக்கு மூன்று வயதானதும் விஜயதசமி அன்று அல்லது பஞ்சாங்கம் குறிப்பிடும் வேறு நல்ல நாளில் முதன் முதலில் கல்வி புகட்டுதல் ஏடு தொடக்கல் எனப்படும்.

ஆலயம், வீடு, பாடசாலை ஆகிய இடங்களில் ஏடு தொடக்கல் நிகழ்வு இடம் பெறும். ஆலயத்தில் பூசை நிகழ்த்தும் சமய குரு, குழந்தையின் தந்தை, ஆசிரியர், நல்ல கல்வி அறிவுள்ள பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவர் ஏடு தொடக்கி வைத்தல் சிறப்பானதாகும். ஏடு தொடக்கும் போது, குழந்தையை முதலில் விநாயகரையும் சரஸ்வதி தேவியையும் வணங்கச் செய்ய வேண்டும். அதன் பின்னர், ஏடு தொடக்கி வைப்பவரும் வணங்குவார். ஏடு தொடக்கி வைப்பவர் வேட்டி அணிந்து, விபூதி முதலான சிவசின்னங்களைத் தரித்து, குழந்தையைத் தனது மடியில் இருக்கச் செய்து, முன்னால் உள்ள தட்டத்தில் வைக்கப்பட்ட அரிசியில் குழந்தையின் விரலைப் பிடித்து, 'அ' முதல் '∴' வரையுள்ள எழுத்துக்களை எழுதுவதும், அதனைச் சொல்விப்பதும் எமது சமய மரபாகும்.



சைவ மக்களின் வாழ்வியல் சடங்குகளில் வாழ்வியல் வேறு, சமயம் வேறு என்ற கருத்துக்கே இடமில்லை. வாழ்வியலோடு இணைந்ததுதான் சமயம். அத்தகைய பண்பினை எமது வாழ்வியல் சடங்குகள் கொண்டுள்ளன.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வாழ்வியல் சடங்கு என்றால் என்ன?
2. வாழ்வியல் சடங்குகள் மூன்றின் பெயர்களைத் தருக ?
3. சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?
4. ஏடு தொடக்க உகந்தவர்கள் யாவர்?

## செயற்பாடு

1. பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடு தொடக்குதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் போது, அவற்றைச் சென்று பார்வையிடுக. அவை பற்றிய தகவல்களைச் சேகரித்து, வகுப்பறையில் சமர்ப்பிக்க.
2. ஆசிரியரின் உதவியுடன் பெயரிடுதல் தொடர்பான விளக்கத்தைப் பஞ்சாங்கத்தில் பார்த்து, அதனை அட்டவணைப் படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- மக்களின் வாழ்க்கையோடு தொடர்புபட்ட சடங்குகள் வாழ்வியல் சடங்குகள் எனப்படும். பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடு தொடக்கல் என்பன அவற்றுட் சிலவாகும்.
- வாழ்வியல் சடங்குகள் நடைபெறும் போது, இறைவழிபாடு முதன்மை பெறுகின்றது.
- வாழ்வியல் சடங்குகள் ஒவ்வொன்றுக்கும் உரிய நோக்கங்கள் உள்ளன.
- வாழ்வியல் சடங்குகள் ஒவ்வொன்றும் அதற்கே உரிய முறையில் கொண்டாடப்படுகின்றன.
- நாம் வாழ்வியல் சடங்குகளுக்கு மதிப்பளித்து, ஒழுகுதல் வேண்டும். அவை நம் வாழ்க்கையை மேம்படுத்தும்.